கிழக்கில் அச்சுக் கலையின் முன்னோடி...
வணசிங்கா பிரிண்டர்ஸ்
496A, திருமலை வீதி, மட்டக்களப்பு.
065 222 7170, 065 36 50 361
wanasingheprinters@gmail.com
மட்டக்களப்பு

# தமிழ் ஓசை

"தரணியெங்கும் தமிழை உரக்கச் சொல்வோம் உரைக்கச் செய்வோம்"

மட்டக்களப்பில்...
பத்திரிகை விற்பனைத்துறையில் முன்னோடி
ராதா ஸ்ரோர்ஸ்
திருமலைவீதி, மட்டக்களப்பு.
(வயோதிபர் இல்லத்துக்கு முன்னால்)
BATTICALOA

முதலமைச்சர் பதவியை வழங்குது தீர்வாகாது 09

மூதூர் இந்து இளைஞர் மன்றம் என்னும் போர்வையில் 4 திய புல்லுருவிகள் குந்து தில்லு முல்லு 07

10 சாலி ஹாஜியார் அமைப்பின் சிறுவர் தின நிகழ்வு

08 ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 03 நபர்களின் சாதனை

ஒலி : 01 | ஓசை : 03 | மாதாந்த வெளியீடு (அக்டோபர்) | பக்கம் : 12 | விலை : 50.00

# இலங்கைத் தமிழர்களுக்காக ஜெனிவாவில் வை.கோ.



"தமிழ் ஈழதேசத்துக்கு பொதுவாக்கெடுப்பொன்றை நடாத்த முன்வாருங்கள் அதற்கு முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் இருந்து சிங்கள இராணுவம் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். சிறையில் நீண்டகாலமாக. அடைக்கப்பட்டிருக்கும் தமிழ்கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் பொதுவாக்கெடுப்பென்பது தமிழர்தாயகத்தை அமைப்பதற்கான மக்கள்...."

தொடர்ச்சி 05 பக்கத்தில்

## கலைஞர் கௌரவம்



கிழக்குபோற்றும் மூத்த கலைஞர் எங்கள் கதைசொல்லி மாஸ்டர் சிவலிங்கம் மாமா...

## 16 வது மாவட்ட சாரணர் ஒன்று கூடல்



பக்கம் 02

உள்ளே... புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான நுண்ணறிவு பயிற்சி வினாக்கள்

## ஊடக ஜாம்பவான் துஷ்யந்தனுக்கு தேசகீர்த்தி விருது

பக்கம் 08





## “மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்.”

அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர். இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.

# வாசிப்பை நேசிக்க வேண்டும்...

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். ஆனாலும் இன்று நம்மத்தியில் வாசிப்பு பெரும் பிரட்சினையாக உருவெடுத்து வருகின்றது. வாசிப்பு பழக்கம் தொழிநுட்பத்திற்குள் சிக்குண்டதனால் பெரும் அவலமாக சென்றுகொண்டிருக்கின்றது. இளையோர் வட்டத்திற்குள் இது பாரிய நெருக்கடியாக வியாபித்திருப்பதற்கு பெற்றோர்களும் காரணமாக இருப்பது. வேதனையான விடயம். குழந்தை கைத்தொலைபேசியில் எதையாவது செய்து கொண்டிருந்தால் அதனை பெருமையாக எண்ணுகிறார்கள். அத்தனை பெருமையும் அவர்கள் பிள்ளைகளுக்கு மாற்றீடாகத்தான் செல்லும் என்பதனை அறிந்தும் அறியாமலா இருக்கிறார்கள். பராயமடையாத பிள்ளை தனது பெற்றோருக்கு தெரிந்தோ தெரியாமலோ தொழிநுட்பத்திற்குள் நுழைகின்றபோது பராயமடையும்.வயதுக்கு முன்னர் அதனை அனுபவரீதியாக கற்றுக்கொள்கின்றனர். அந்த பராயமடையும் வயதிற்குட்பட்ட காலத்துக்குள் தனது எதிர்கால இலட்சியத்தினை இழந்து வருகின்ற நிலையினை அந்தப்பெற்றோர்கள். கண்டுகொள்வதில்லை பெற்றோர்களோ பிள்ளைகளோ நல்லநூல் களைத் தேடி வாசித்துப் பயனடையும் சிந்தனைகளை ஏன் உருவாக்க முடியாது. பிள்ளை போனில் கம்பியூட்டரில் எவ்வளவு வேலை பார்க்கிறது என்று பெருமை படக்கூறுகின்ற சமூகத்தைத் தான் நாம் உருவாக்கி வருகின்றோம். இதனால் பிள்ளையின் எதிர்கால கல்வியில் இடர்பாடுகள் ஏற்படும் என்று சிந்தனை அற்றவர்களாக இருக்கின்றோம். அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா இந்தியாவின் பணக்காரர் பில்ட்கேஸ் ஆகியோர் தங்களது பிள்ளைக ளுக்கு பத்தொன்பது வயதுக்குப் பின்னர்தான் கைத்தொலைபேசி பாவிப்பதற்கு அனுமதியளித்தார்களாம். ஆனால் நமது பிள்ளைகள் பத்தொன்பது வயதுக்கு முன்னர் சகல விடயங்களிலும் பரிபூரணம் பெற்று விடுவார்கள் தேடலும் வாசித்தலும் எழுதுதலும் இன்று இளையசமூகத்தில் குறைவடைந்தே செல்கின்றது. இன்றைய காலத்தில் வாசிகசாலைகளிலோ அல்லது நூல் வெளியீட்டு விழாவிலோ குறிப்பிட்ட சில வயதினரைக் காணமுடியாது. வயதுபோனவர்கள் தான் தாம் இன்னும் அறிவை வளர்க்க வேண்டுமென வாசிகசாலை நோக்கி செல்கின்றனர். பரந்தவெளியில் தேடவேண்டிய விடயங்கள் உள்ளங்கைக்குள் உள்ளடக்கப்பட்டதனால். தேவைப்படுவோர் அர்ப்பணிப்பு தியாகம் செய்து தேட வேண்டிய தேவையில்லை வாசிப்புக்கு வாசிகசாலை நோக்கி செல்லவேண்டிய தேவையும் இல்லை, சாதாரணமாக ஒரு குழந்தைக்கு ஏடு தொடக்கி விட்டால் மிகுதிச் செயற்பாட்டை அக்குழந்தை தொழிநுட்பரீதியாக பேச்சுவழக்கு உச்சரிப்பு என்பவற்றை கற்றுக்கொள்கின்றது. அதனையே நம்புகின்ற காலமாகவும் மாறிவிட்டது இனி வருங்காலங்களில் ஏடு தொடக்குதல் இயந்திரமயமாக்கப்பட்டாலும் ஐயமில்லை எனவே வளர்ந்து வரும் எதிர்கால சமூகத்தின் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்குவதற்கு பலசெயற்றிட்டங்களை முன்னெடுத்து வாசிப்பு வீதத்தினை அதிகரிக்க ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் அனைவரும் கைகோர்த்து தத்தமது பிள்ளைகளுக்கு வாசிப்பை நேசிக்க வைக்கவேண்டிய கடமையும் பொறுப்புமாகும்...

**தமிழ் ஓசை**
இல. 184, பஸாா் வீதி, மட்டக்களப்பு.
தொ. பேசி இல.: 077 318 00 33 | மின்னஞ்சல் : thamilosai7@gmail.com

### மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரின் மண்வாசனை தாங்கி வருகின்றது தமிழ் ஓசை

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்பு எழுத்து திறனை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலை மாணவர்களும் தங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்பலாம் தாங்கள் எழுதி அனுப்பும் ஆக்கங்களில் பாடசாலையின் பெயர். வகுப்பு, முழுப்பெயர் என்பவற்றை குறிப்பிட்டுக்கொள்ளவேண்டும்.
அனுப்பவேண்டிய முகவரி

**ஆசிரியர்**
**தமிழ் ஓசை**
**இல: 184, பஸாா் வீதி, மட்டக்களப்பு.**

“நிதானமாகத்தான் சிந்திக்க வேண்டும். ஆனால் விரைவாகச் செயல்பட வேண்டும்”

## பொறியியலாளராக வந்து நாட்டிற்குச் சேவையாற்றுவதே இலட்சியம்!

# சாதனை மாணவி சுதர்சன் ஜிவானுஜா

பொறியியலாளராக வந்து நான் பிறந்த இலங்கைத் திருநாட்டிற்கு குறிப்பாக எனது மண்ணுக்குச் சேவையாற்றுவதே எனது இலட்சியமாகும். இவ்வாறு புலமைப்பரிசில் பரீட்சையில் 187 (தமிழ்மொழி மூலத்தில்) புள்ளிகள் பெற்று அம்பாறை மாவட்டத்தில் இரண்டாம் நிலையினைப் பெற்றுச் சாதனை படைத்த மாணவி செல்வி சுதர்சன் ஜிவானுஜா கூறினார். பஸ்போக்குவரத்தோ ரியுசன் வசதியோ மேலதிக சொகுசுகளோ இல்லாத மிகவும் பின்தங்கிய பிரதேசமான மல்வத்தை புதுநகரில் இச்சாதனை படைக்கப்பட்டிருக்கின்றது. இவர் புதுநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் பயில்பவர். இந்தவருடம்



**காரைதீவு நிருபர் வி. ரி. சகாதேவராஜா**

கோட்ட மட்ட வலயமட்ட ஆங்கில தினப் போட்டியில் முதலிடம் பெற்றுச்சாதனை படைத்தவர். கல்முனைக்கல்வி மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை வலயத்தின் சம்மாந்துறைக் கோட்டத்திலுள்ள பின் தங்கிய மல்வத்தை புதுநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இரண்டு புதிய வரலாற்றுச் சாதனைகளைப் படைத்துள்ளது.

ஒன்று இந்தப்பாடசாலை மாணவி சுதர்சன் ஜிவானுஜா 187 புள்ளிகளுடன் அம்பாறை மாவட்டத்தில் 2ஆம் நிலையைப் பெற்றவராவார். இரண்டாவது சாதனை என்னவெனில் முதற்றடவையாக இப்பாடசாலையில் 11 மாணவர் சித்தி பெற்றமையாகும். குறிப்பிடத்தக்க எவ்வித வசதிகளூ மற்ற புதுநகரில் சாதாரண குடும்பச் சூழலைக் கொண்ட ஜிவானுஜா வின் தந்தையார் சுதர்சன் சம்மாந்துறை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிக்அப் சாரதியாவார். குடும்பத்தில் மூத்தபிள்ளை இவர். இவருக்கு அடுத்ததாக இரண்டரை வயதில் மற்றுமொரு குழந்தை உள்ளது.

சாதனை மாணவி ஜிவானுஜா கருத்துரைக்கையில் :
நான் இந்தப்பரீட்சையில் நல்ல புள்ளியைப் பெறுவேன் என்ற நம்பிக்கை நிறைய இருந்தது. ஆனால் மாவட்டத்தில் இரண்டாம் நிலைக்கு வருவேன் என்று எதிர்பார்த்திருக்கவில்லை முதலில் என்னைப் படைத்த இறைவனுக்கும் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் நன்றியைக் கூறுகின்றேன்.

எனது சாதனையை அறிந்தவுடன் எம்மைத்தேடி வந்து பாராட்டிய சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் கணக்காளர் எம்.கேந்திரமூர்த்தி உதவிக் கல்விப்பணிப்பாளர்களான வி.ரி.சகாதேவராஜா எ.கபூர் பா.மே.திட்ட இணைப்பாளர் அச்சிமொகமட் ஆகியோரை எனது வாழ்வில் மறக்கமுடியாது.

காலையில் 5மணிக்கு துயிலெழுந்து படிப்பேன். இரவில் 10 மணி வரை படிப்பேன். பள்ளியில் மட்டுமே படிப்பு. என்னை நெறிப்படுத்திய அதிபர் சுந்தரநாதன் சேர் நன்கு பயிற்சியளித்துக் கற்பித்த விமலகீதன் சேர் ஆகியோரை வாழ்நாளில் மறக்கமுடியாது என்றார்.

சந்தோஷத்தை விட கஷ்டங்கள் மனிதனுக்கு நிறைய நல்ல படிப்பினைகளை சொல்லிக் கொடுக்கின்றன...

- விவேகானந்தர்-



# வறுமை

அல்லும் பகலும்
அயராது உழைத்தாலும்
அடிக்கிறது எங்களைத்தான்
வறுமை எனும் புயற்காற்று.

காடழித்து சேனை செய்து
காத்திருந்து கண்விழித்து
செய்கின்றோம் அறுவடையை
செலுத்துகின்றோம் செல்வந்தருக்கு.

பட்ட கடன் தீரவில்லை
பட்டினியும் ஓயவில்லை-ஆனாலும்
பொறுக்கவில்லை என்மனது
போகின்றேன் கடன் கேட்டு.


பான் (Fan) காற்றில் வீற்றிருந்து
பஞ்சு மெத்தையில் படுத்துறங்கி
பணம் குவிக்கும் மனிதருக்கு
எங்கள் துன்பம் எம்மட்டு.

பசியோடு பாடு பட்டும்
தீரவில்லை எம் கொடுமை
ஆரோ பயனடைய
அலைகின்றோம் நாம் இங்கே.

வாட்டுகின்ற பஞ்சத்தால்
வாடி நிற்கும் போதெல்லாம்
வந்துதவும் மனப்பாங்கு
வராது அந்தப் பணக்காரருக்கு.

என்னதான் செய்யட்டும் - என்று
ஏங்கி நின்றேன் இறைவனிடம்
அவன் கருணை கிடைக்குமென்று
ஆறுதல் அடைகின்றேன்....

**வசந்தபாலா**
பூம்புகார், மட்டக்களப்பு




# நல்ல பிள்ளை

மதராசு நகரிலோர் அப்பா இருந்தார்—அவர்
மக்களென நாலுபேரைப்பெற்று வளர்த்தார்.
உதவாத மூத்தபிள்ளை ஊரை வெறுத்தான்—அவர்
ஊரை விட்டு ஓடி வேறு ஊரில் ஒழித்தான்.
மது ஆசை உள்ள மகன் வாங்கிக் குடித்து – உள்ள
வருமானம் தீர்ந்ததுமே பிச்சையெடுத்தான்.
அது போதா தென்றொவன் தீயவழியால் பிறர்
ஆஸ்திகளை கொள்ளையிட்டுச் சிறை புகுந்தான்.
நாலாவது மகனோர் பெண்ணை விரும்பி – ஊரில்
நாலுபேரின் நச்சரிப்பில் நஞ்சு குடித்தான்.
ஏலாத தந்தையவன் சந்திகளிலே – குந்தி
எல்லோரின் சில்லறைக்கும் ஏங்கி இருந்தான்.
அந்த ஊர் கோடியிலோர் அப்பா இருந்தார் – அவர்
ஆசைக்கொரு பிள்ளைதனைப் பெற்று வளர்த்தார்.
அந்தமகன் கல்விகற்றுப் புத்திசாலியாய் – பலர்
ஆசியுடன் மேதாவி ஆகி வளர்ந்தான்.
வாகனத்தில் சென்று மகன் காட்சிரசிக்க – அந்த
வாகனத்தை தந்தையவர் பார்த்து ரசித்தார்.
ஆகமொத்தம் ஒரே பிள்ளை ஆயிருந்தாலும்
அர்த்தமுள்ள பிள்ளையென ஆட்கள் கூறினர்.

**திமிலைமகாலிங்கம்**

# இலங்கைத் தமிழர்களுக்காக ஜெனிவாவில் முழங்கினார் வை.கோ.



தமிழீழம் என்ற உச்சரிப்புக்கு இலங்கையரசாங்கம் தடை விதித்து பல வருடங்கள் ஆகிவிட்டது.இந்த சொற்றொடரை உணர்வு பூர்வமாக உச்சரித்தவர்களெல்லாம் இப்பொழுது அச்சொல்லையே மறந்து போனார்கள்.சிலர் அதை உச்சரிப்பதற்கே பயப்பிடுகின்றார்கள்.இன்னும் இச்சொல்லை உணர்வு பூர்வமாக புலம் பெயர் சமூகமும் இந்திய தமிழக தலைமைகளும் தாரகை மந்திரமாக உச்சரித்துக் கொண்டிருக்கின்றார்களென்பது அண்மைக்கால பல சம்பவங்களினால் உணர்த்தப்பட்டிருக்கின்றது. தமிழ் ஈழத்திற்கு பொது வாக்கெடுப்பு நடத்துங்கள் என ஜெனீவாவில் ஐ.நா சபையிடம் வை.கோ பூகோளம் தழுவிய கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இக்கோரிக்கையானது வட்டுக்கோட்டைத் தீர்மானம். அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தாயக தாகத்தை மீண்டும் உலகமேடையில் ஒலிக்கப்பண்ணும் கைங்கரியமாக இருக்கிறது. என்று விபரிக்கப்படுகிறது.

ஜெனிவாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமை ஆணைக்குழுவின் 36ஆவது கூட்டத்தொடரில் கடந்த 18.09.2017 ஆம் திகதி கலந்து கொண்டு உரையாற்றிய தமிழக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை.கோ தமிழர் உலகம் என்ற அமைப்பின் சார்பில் கலந்து கொண்டு உரையாற்றினார். உரையாற்றும் போது அவர் தனது உரையில் சுதந்திரமான இறையாண்மையுள்ள தமிழீழ தேசத்துக்காக ஈழத்தமிழர் தாயகத்திலும் ஐ.நா.சபையின் தலைமையில் வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் என்ற பகிரங்க கோரிக்கையொன்றை விடுத்துள்ளார். அவர் தனது உரையின்போது இன்னும் பல விடயங்களை கோரியிருந்தார் தமிழ் ஈழதேசத்துக்கு பொது வாக்கெடுப்பொன்றை நடாத்த முன்வாருங்கள் அதற்கு முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் இருந்து சிங்கள இராணுவம் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். சிறையில் நீண்டகாலமாக.அடைக்கப்பட்டிருக்கும் தமிழ்கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் பொதுவாக்கெடுப்பென்பது தமிழர் தாயகத்தை அமைப்பதற்கான மக்கள் ஆணையாக கருதவேண்டுமென்ற பொருள்படவும் ஆக்கரோசத்துடனும் தனக்கு வழங்கப்பட்ட சொற்ப நிமிடத்தில் வை.கோ பேசிமுடித்தார்.

வை.கோ.வின் உரைதொடர்பாக ஈழத்து அரசியல் தலைவர்கள் சிலர் நக்கல் நயம் கலந்த விமர்சனங்களை முன்வைத்துள்ள போதும் அவரின் உரை தொடர்பில் உண்டாக்கப்பட்டிருக்கும் மீள்பார்வை அல்லது வரலாற்று மதிப்பீடு என்பது தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அவசியமான ஒரு விடயமாகவும் இருக்கலாம். தவிர்க்கப்படமுடியாதபடி வட்டுக்கோட்டை தீர்மானம் என்ற (1976-5-14) பட்டயத்தின் கீழ் தமிழர் விடுதலைக்கூட்டணியின் முதலாவது மாநாட்டில் தனிநாட்டுக் கோரிக்கையை பிரகடனமாக முன்வைக்கப்பட்டது. ஒவ்வொரு நாட்டுக்கு முள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திர இறமையுள்ள மதச்சார்பற்ற சோஷலிச தமிழீழம் அமைக்கப்படுமென தீர்மானம் கூறியது. தமிழர்களின் அரசியல் வரலாற்றிலும் உரிமைப் போராட்டத்திலும் வட்டுக்கோட்டைத் தீர்மானமானது கொள்கையளவிலும் கருத்தளவிலும் இளைஞர்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தியது மாத்திரமன்றி உணர்ச்சிமயமான விடுதலை வேட்கைக்கும் வித்திட்டது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் உணர்ச்சிமயமான தாக்கங்கள் இளைஞர் யுவதிகள் மற்றும் புத்திஜீவிகள் மட்டத்தில் ஆழமான அரசியல் தாக்கத்தை உருவாக்கியதன் காரணமாகவே பல விடுதலை இயக்கங்கள் வடகிழக்கில் உருவாக கால்கோளாகியது. இவ்வியக்க விரிவாக்கங்கள் வடகிழக்கில் விஸ்தரிப்புப் பெறுவதற்கு இரண்டு காரணங்கள் மூலத்தன்மையாகியது ஒன்று முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் உருவாக்கப்பட்ட அரசியல் சாசனம்(1978) மற்றையது 1978 மே 19ம் திகதி அமுலுக்கு வந்த புலிகள் தடைச்சட்டம் இவை தவிர இன்னும் துணையான காரணங்கள் சேர்ந்து கொண்டு ஈழவிடுதலைப்போரை மும்முரப்படுத்தியதுடன் 1983 ஆம் ஆண்டு யூலையில் நாடு பூராகவும் திட்டமிட்ட முறையில் உருவாக்கப்பட்ட இனக்கலவரம் தமிழீழத்துக்கான தாகத்தை வடகிழக்கு இளைஞர்கள் மத்தியில் மாத்திரமல்ல மலையக இளைஞர் சமூகம் மத்தியிலும் வீரிப்பை ஏற்படுத்தியது. தமிழீழமென்பது வடகிழக்கு மக்களின் ஆழமான கனவாகவும் தாகமாகவும் இருந்தது பற்றி இங்கு விபரிக்கவேண்டிய அவசியமில்லை. ஈழப்போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக கூறப்பட்ட போதும் அதன் நீறு பூத்த நெருப்புத் தன்மைக்கு பரிகாரம் காணப்பட வேண்டுமென இலங்கையை உலகநாடுகளும் சர்வதேச சமூகமும் ராஜதந்திர வட்டாரங்களும் வலியுறுத்தியது. இந்த அழுத்தங்களை சமாளிக்கும் பாங்கில் இலங்கை ஒப்புதல் வாக்குமூலம் அளித்த போதும் போரின் வெற்றியை முன்னிலைப் படுத்தினார்களே தவிர ஈழப்போருக்கான நதிமூலத்தைக் கண்டறிந்து அதற்கான பரிகாரத்தையோ தீர்வையோ காணுவதற்கு இலங்கையரசு கடுகளவு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இலங்கையில் இனவாதம் என்ற போக்கு மூடி மறைக்கப்பட்டு பயங்கரவாதம் தலைகொண்டிருக்கும்

திருமலை நவம்



நாடு இலங்கையென்ற வகையில் அதை இல்லாதொழிக்க அனைத்து நாடுகளும் கைகோர்த்துக் கொண்டதன் பாரிய துரோகத்தையே முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் கண்டார்கள்.

அந்த துரோகத்தனத்தை முன்னின்று செய்தவர்கள் ஈழத்தமிழர்களின் நீண்டகாலப் போராட்டங்களுக்கும் அபிலாசைகளுக்கும் போதுமான தீர்வைப்பெற்றுத்தர இலங்கை அரசை தூண்டவுமில்லை எச்சரிக்கவுமில்லை பயங்கரவாதத்தை சர்வதேசப்பிரச்சினையாக அடையாளங் கண்டவர்கள் இனப்பிரச்சனையை உள்நாட்டுப்பிரச்சனையென்று கூறிக் கொண்டு அதிலிருந்து நழுவிக் கொண்டார்கள். முள்ளிவாய்க்கால் போரில் இலங்கை அரசாங்கத்துக்கு உதவிய முதலாளித்துவ நாடுகளாயினும் சரி சோஷலிச நாடுகளாயினும் சரி ஈழத்தமிழர்களின் போராட்டத்தை பயங்கர வாதமாகப் பார்கிறார்களே தவிர அதன்நீண்டகால தார்ப்பரியத்தை யதார்த்த கண்கொண்டு பார்க்காத நிலையில் தமிழ்மக்கள் தோற்றுப் போன ஒரு சமூகமாக 2009 ஆம் ஆண்டுக்குப்பின் ஏளனப் படுத்தப்பட்டார்கள். புலம் பெயர் சமூகத்தின் மீது நீண்ட காலமாகவே இலங்கை அரசாங்கம் காழ்ப்புணர்ச்சி கொண்டதாகவே காணப்பட்டது. அதன் ஒரு விளைவாகவே 16 புலம் பெயர் அமைப்புகளுக்கு தடைவிதிக்கப்பட்டது. அவ்வமைப்புகளைச் சேர்ந்த 400 பேருக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு நாட்டுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டது. இந்த சம்பவங்களுக்கு அப்பால் புலம் பெயர் நாட்டாளர்களால் நாடுகடந்த தமிழீழமென்ற தேசம் தழுவிய பிரகடனமொன்று செய்யப்பட்டு அமைப்பின் பூகோளம் தழுவிய முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பக்கவிளைவாகவே 2012 ஆம் ஆண்டு ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்ற சாட்டுக்கள் தீர்மானமாக கொண்டுவரப்பட்டன. நாட்டின் உள்நிலைவாரியாகவும் சரி சர்வதேச முறை சார்ந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு தேசியப் பிரச்சனையொன்று இருந்து வருகின்றது என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறதே தவிர அதற்கான நிரந்தரமான பரிகாரம் காணப்படவேண்டுமென்ற ஆர்வமும் அவசியமும் உணர்த்தப்பட்டதாக தெரியவில்லை. புதிய தேசிய அரசாங்கம் 2015 ஆம் ஆண்டளவில் ஆட்சிக்கு வந்தபின் அதிக நம்பிக்கை கொண்டவர்களாக தமிழ் மக்கள் காணப்பட்டபோது தேசிய அரசாங்கத்தின் மென்தன்மைப் போக்குகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையீனங்களையே உண்டாக்கிக் கொண்டிருக்கிற தென்பதே உண்மை. புதிய அரசாங்கமானது பௌத்த அடிப்படைவாதத்தையும் மகா நாயக்க தேரர்களின் அங்கீகாரத்தையும் பெற நினைப்புடன் சிங்கள தேசிய வாதிகளுக்கு பயந்து கொண்டு கடந்த காலத்தைப்போலவே இழுத்தடிப்புக்களுக்கான போக்குக்கள் கொண்டதாக காணப்படுகிற தென்பதே இன்றைய தமிழ் மக்களின் கருத்தாகவும் விமர்சனமாகவும் காணப்படுகிறது. சமஷ்டி



இணைப்பு அதிகார வலு ஆகிய இல்லாத ஒரு அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் மக்கள் ஆர்வம் கொண்டவர்களாக காணப்படவில்லை என்பது ஒரு வெளிப்படையான உண்மை. இவ்வகை சூழ் நிலையின் பிரதி பலிப்பாகவே மாற்று வடிவத்திலான ஒரு உரையாக தமிழக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை.கோபாலசாமியின் ஜெனிவா உரை காணப்படுகிறது. பொது வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் அதற்கு முன்னர் சிங்கள இராணுவம் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும் தமிழ் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டு மென்ற நிபந்தனைகளில் இராணுவ வெளியேற்ற மென்பதும் கைதிகள் விடுவிப்பு காணாமல்போனோர் விவகாரமென்பதெல்லாம் அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலில் கடுமைப் படுத்தப்பட்ட விவகாரங்களாகவே இன்னும் காணப்படுகின்றது. இவை யெல்லாவற்றின் ஒட்டுமொத்த விளைவாகவே தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பை நடாத்துங்கள் என்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டிருக்கின்றது. இவற்றை இலங்கையரசாங்கம் வெற்றி கொள்ள வேண்டுமாயின் உரியபரிகாரங்களை உரிய காலத்தில் மேற்கொள்ளத் தவறுமாயின் அவற்றின் விளைவுகளும் விபரீதங்களும் இன்னும் இன்னும் இந்தநாட்டை சீரழித்துக் கொண்டுவிடுமென்பதை அரசியல் தலைமைகளும் சிங்கள மக்களும் பௌத்த அடிப்படை வாதமுமே உணர்ந்து கொள்ள வேண்டும்.

■ ■ ■

## கோவிலூர் செல்வராஜனின்.. "ஊருக்குத் திரும்பணும்"

## சிறுகதை நூல் வெளியீடு

பல்துறையில் பரிணாமித்த கோவிலூர் செல்வராஜன் எழுதிய ஊருக்கு திரும்பணும் சிறுகதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் இலண்டன் ஈஸ்ட்ஹாம் ஸ்ரீமுருகன் ஆலய அரங்கில் இலங்கையின் முதுதமிழ்ப் புலவர் அமரர் நல்லதம்பி அவர்களின் புதல்வர் புலவர் ந. சிவநாதன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. எழுத்தாளராக, கவிஞராக, பாடலாசிரியராக, பாடகராக, நடிகராக, ஊடகவியலாளராக முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சித் தயாரிப்பாளர் என்று பல பரிமாணங்களைக் கொண்ட பன்முக கலைஞர் கோவிலூர் செல்வராஜன் இவர் எழுதிய இந்த நூல் ஏலவே இலங்கையில் கொழும்பு தமிழ்சங்கம், மட்டக்களப்பு கண்ணகி கலை இலக்கிய மன்றம், திருக்கோவில் கலாசார மன்றம், கரவாகு கலை இலக்கிய சந்தை ஆகியவற்றினூடாகவும் மற்றும் கனடா, நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளில் உள்ள இலக்கிய அமைப்புகளாலும் அறிமுகம் செய்யப்பட்டு. இறுதியாக இலண்டனில். இலண்டன் தமிழவை அரவணைப்பில் நடைபெற்றிருக்கின்றது.

இவ் விழாவில் பிரதம அதிதியாக சட்டவாளர் திரு. திருமதி. மு. இரத்னபாலன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இலண்டன் தமிழவை அரவணைப்பில் நடந்த இந்த விழாவில் ஆசியுரையை இலண்டன் ஈஸ்ட் ஹாம் முருகன் கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ நாகநாதக் குருக்கள் அவர்களும், வரவேற்புரையை தமிழவைத் தலைவர் திரு.பால.இரவீந்திரன் அவர்களும், தலைமை உரையை தமிழவை ஸ்தாபகர் திரு. புலவர் ந.சிவநாதன் அவர்களும், வாழ்த்துரைகளை கவிஞர் திரு.திருமலை பாலா, மற்றும் டென்மார்க்கிலிருந்து வந்திருந்த எழுத்தாளர் திரு.தருமன். தர்மகுலசிங்கம் அவர்களும், மதிப்பீட்டு உரையை எழுத்தாளர், ஊடகவியலாளர் திருமதி நவஜோதி யோகரட்ணம் அவர்களும், நூல்திறனாய்வை எழுத்தாளர் திரு.சக்தி. சக்திதாசன் அவர்களும், வெளியீட்டுரையை கவிஞரும் தமிழறிஞருமான திரு.க.மனோகரன் அவர்களும் வழங்கினார்கள். இறுதியில் ஏற்புரை யினை கோவிலூர் செல்வராஜன் அவர்களால் வழங்கப்பட்டது. பிரதம அதிதியின் உரைக்குப்பின், கோவிலூர் செல்வராஜனுக்கு ஆலய குருக்களினால் தலைப்பாகை அணிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவம் அளிக்கப்பட்டது.





# சாதாரண பொதுமக்களும் விளங்கக்கூடிய விதத்தில் சட்டங்கள்



## மட்டக்களப்பு மாவட்டநீதிமன்ற நீதிபதி எம்.பி.முகைதீன் எழுதிய சாதாரண பொது மக்களும் விளங்கக்கூடிய விதத்தில் சட்டங்கள். கடந்தமாத தொடர்ச்சி...

**சட்டத்துக்கு எதிராக கைது செய்வதிலிருந்து பாதுகாக்கும் உரிமையும், சுதந்திரமும்.**

எங்களுடைய நடைமுறையிலிருக்கும் 1978ம் ஆண்டின் அரசியலமைப்பின் 13வது பிரிவு, சட்டத்துக்கு எதிராக ஒரு நபர் கைது செய்யப்படுவதையோ அல்லது தடுத்து வைத்து தண்டனை வழங்குவதையோ அனுமதிக்கவில்லை. அவ்வாறு ஒரு நபர் சட்டத்திற்கு முரணாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அது அவருடைய உரிமையையும் சுதந்திரத்தையும் பாதிக்கின்ற செயலாக அமைகின்றது.

எங்களுடைய அரசியலமைப்பு 13(1)ம் பிரிவு பின்வருமாறு ஏற்பாடு செய்கின்றது. **"ஒரு நபர் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளைத் தவிர வேறு வழிகளில் கைது செய்யப்பட முடியாது"** என்று ஏற்பாடு செய்கின்றது. கைது செய்யப்படுதல் என்பது நியாயப்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும். அவ்வாறு நியாயப்படுத்த முடியாத கைதுகளை அனுமதிக்க முடியாது.

**கைதுகளின் வகைகள்**

பொலிஸாரினால் கைது செய்யப்படுகின்ற நபர்கள் இரண்டு வகைகளுக்கு உட்பட்ட கைதுகளுக்காக கைது செய்யப்படலாம்.

1. கைது செய்யப்படுவதற்காக நீதிமன்றினால் பிறப்பிக்கப்படும் பிடியாணை (warrant) இன்றிக் கைது செய்தல்.
2. நீதிமன்றம் ஒன்றினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கு அமைவாக கைது செய்தல்.

நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை இல்லாமல் ஒரு நபர் கைது செய்வது பற்றிய ஏற்பாடுகளை எங்களுடைய குற்றவியல் நடபடி முறைக்கோவையின் சட்டத்தின் பிரிவுகள் 23,28,32 ஆகியன ஏற்பாடு செய்கின்றன. இதே போன்று எங்களுடைய குற்றவியல் நடபடி முறைக் கோவையின் சட்டத்தின் பிரிவுகள் 63 69 பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 85 பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரிவு 6 (1) அத்துடன் காலத்துக்கு காலம் அவசியம் ஏற்பட்டால் பிறப்பிக்கப்படும் அவசரகால நிலமைகளிலும் நீதிமன்றத்தின் பிடியாணைக்கட்டளைகளிலும் ஒரு நபர் கைது செய்யப்படுகின்ற ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

பொதுவாக ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் பிடியாணையின்றி ஒரு நபரைக் கைது செய்வதாக இருந்தால் அத்தகைய நபர் மிகவும் பார தூரமான குற்றச்செயலில் ஈடுபட்டிருந்தால் அல்லது உள்வாங்கப்பட்டிருந்தால் அவரை பொலிஸ் பிடியாணையின்றி கைது செய்ய முடியும். அத்துடன் எங்களுடைய குற்றவியல் நடபடி முறைக்கோவை சட்டத்தின் பிரிவுகள் 50,53 அத்துடன் இதே சட்டத்தின் பிரிவு 59 ஒரு நபர் நீதிமன்றினால் பிறப்பிக்கப்படும் பிடியாணை (warrant) மூலம் கைது செய்யப்படுகின்ற ஏற்பாடுகளை மேலும் சுட்டி நிற்கின்றன இவ்வாறு பிடியாணையின் உதவியுடன் ஒரு நபரை எந்த குற்றங்களுக்காக பொலிசார் கைது செய்யவேண்டும் என்பது தொடர்பில் எங்களுடைய குற்றவியல் நடபடி முறைக்கோவையின் சட்டத்தின் அட்டவணையில் தெளிவாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

பிடியாணையின்றி (warrant) ஒரு நபர் பாரதூரமற்ற (Non cogizable) குற்றத்துக்காக கைது செய்யப்படுவாரேயானால் அது சட்ட முரணான கைதாக கருதுவதோடு அது அந்த நபரின் அடிப்படை மீறுகின்ற செயலுக்கு ஒத்ததாகவும் அமையும். இவ்விடயத்தை இலங்கையில் தீர்க்கப்பட்ட வழக்குகள் சுட்டிக்காட்டுகின்றன. Namasivayam VS Gunawardana S.C NO16/86 (C.minutes of 24.09.1987) என்ற வழக்கில் sarwananda C.J அவர்களும் Piyasiri VS Fernando A.S.P(1988) I SLR 173 at 184 நீதி அரசர் H.A.D Silva நீதி அரசர் அவர்களும் இது தொடர்பில் தங்களது விரிவான கருத்துக்களை மேலே காட்டப்பட்ட வழக்குகளில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

அத்துடன் VS Perera Vivinnee Gunawardana, Danny VS Sirinimal silva (2001) I SLR 29 Joseph perera VS A.G(1992) I SLR 199 என பெயர் குறிப்பிடப்பட்டுத் தீர்க்கப்பட்ட வழக்குகளில் கைது என்பது சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகவும் அது சட்டத்துக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் எனவும் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

**கைதிக்கான காரணம்**

யாராவது ஒரு நபர் கைது செய்யப்படுவாராக இருந்தால் அவர் அவ்வாறு கைது செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அந்தக் கைதிற்கான காரணங்களை பொலிசார் அத்தகைய நபருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று எங்களுடைய அரசியலமைப்பின் பிரிவு 13(1)ம் எங்களுடைய குற்றவியல் நடபடி முறைக்கோவைச் சட்டத்தின் பிரிவு 23(1)ம் ஏற்பாடு செய்கின்றன. அதாவது அவர் கைது செய்யப்படுவதற்கான குற்றச்சாட்டை அத்தகைய நபருக்கு பொலிசார் தெரியப்படுத்த வேண்டும் என்பது இப்பிரிவுகளின் ஏற்பாடாகும்.

வெறுமனே பொலிசார் எவ்வித காரணங்களையும் அத்தகைய நபருக்குத் தெரியப்படுத்தாமல் ஒரு நபரை அடித்துத் துன்புறுத்தி **"வா ஜீப்பில் ஏறு பொலிசுக்குச் செல்ல வேண்டும்"** என்று அழைத்து செல்ல முடியாது. அவ்வாறு செயற்படுவது மேலே கூறிய இரண்டு சட்ட ஏற்பாடுகளுக்கும் முரணான செயற்பாடாகும். நடைமுறையில் இவ்வாறான கைதுகள் தான் இவற்றிலிருந்து பொலிசார் தங்களைப் பாதுகாத்து சட்டம் என்ன சொல்கின்றதோ அதை செயற்படுத்தக்கூடிய சட்ட பாதுகாவலராக தங்களைத் தாங்களே மாற்றிக்கொள்ள வேண்டும்.

தொடரும்....

# அரசியலுக்கு அப்பால் அஹிம்சாவின் சமூகசேவை

தாயக பிரதேசத்தில் மிகவும் வறுமையில் கல்வி பயிலும் மாணவர்களை இனங்கண்டு அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடும் அஹிம்சா சமூக நிறுவனம் கல்விக்கு கரம்கொடுப்போம் வைத்திய துறையை வளர்த்தெடுப்போம். படிப்பதற்கு வாய்ப்பும் வசதியும் அளித்தால் எந்த ஏழையின் குழந்தையும் உயர்ந்த கல்வியையும் சிறந்த பதவிகளையும் பெறமுடியும்.என்ற அடிப்படையில் அஹிம்சா மிகவும் வறுமையிலும் விஞ்ஞான உயிரியல் பிரிவில் கல்வி பயிலும் மண்டூர் கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் மாணவி ஒருவருக்கான மாதாந்த கொடுப்பனவாக 3000/- வீதம் இந்த வருடத்தின் நான்கு மாதத்திற்கான கொடுப்பனவாக 12000/- ரூபாவிற்கான காசோலையினை களுவாஞ்சிக்குடி நலன்புரிச் சங்கம் லண்டன் கிளை மூலம் அஹிம்சா நிறுவன அலுவலகத்தில் வைத்து நிறுவனச் செயலாளர் வசந்தராஜா மற்றும் முன்னாள் வங்கி முகாமையாளர் ஆகியோரால் வழங்கிவைக்கப்பட்டது. பல வழிகளிலும் தாயக மக்களது கல்வி, பொருளாதாரம், மற்றும் சுகாதாரத்திற்கு கிராம மட்டத்தில் பல உதவிகளை செய்து வந்த களுவாஞ்சிக்குடி நலன் புரிச் சங்கம் தற்போது அஹிம்சா நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் வடக்கு கிழக்கு பிரதேசங்களிலும் கற்றலை ஊக்கப்படுத்தி சிறந்த கல்விமான்களை சமூகத்தில் உருவாக்கும் நோக்குடனும் தமது சேவைகளை கல்விக்காகவும் பொருளாதார வளர்ச்சிக்காகவும் அரசியலுக்கு அப்பால் தமது பணியினை மேற்கொண்டு வருகின்றது.



# கலைஞர் கௌரவம்

## தமிழ் ஓசையில் கிழக்குபோற்றும் கலைஞர். மாஸ்டர் சிவலிங்கம் மாமா...

மட்டக்களப்பு. மஞ்சந்தொடுவாயினை பிறப்பிடமாகவும் கல்லடியினை வசிப்பிடமாகவும் கொண்ட கலைஞர் இரட்ணம் சிவலிங்கம். 1933.03.28 பிறந்தவர். ஆசிரியர் பரம்பரையினைக் கொண்டமையினால் மாஸ்டர் சிவலிங்கம் என அழைக்கப்பட்டார். வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகையூடாக சிறுவர் கதைகளை விதம் விதமாக எடுத்துரைத்தமையினால். கதைமாமா, வானொலி மாமா என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். சிந்தாமணி, தினபதி ஆகிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியராக கடமையாற்றினார். சிந்தாமணி பத்திரிகையில் சிறுவர் சிந்தாமணி பகுதியில் வாரம் ஒரு சிறுவர் கதை எழுதவேண்டும் என்று சபதத்தினை எடுத்து ஒவ்வொரு கதையாக வெளியிட்டு பெரும் வரவேற்பினைப் பெற்றார். இவரது கலைச்சேவையினை பாராட்டி பல பட்டங்களும் விருதுகளும் வழங்கப்பட்டன. மத்திய அரசினால் கலாபூஷணம், அருட்கலைத்திலகம், வில்லிசைச்செல்வர் ஆகிய விருதுகளும் வடக்கு கிழக்கு மாகாண சபையினால் ஆளுனர் விருதும் வழங்கப்பட்டது. இவரினால் வெளியிடப்பட்ட "அன்பு தந்தை பரிசு" என்ற கதைப் புத்தகத்திற்கு வடக்கு கிழக்கு மாகாண கல்விபண்பாட்டு கலாசார அமைச்சினால் சிறுவர் இலக்கியத்திற்கான சாஹித்திய மண்டலப்பரிசு வழங்கப்பட்டது. லண்டனில் உள்ள பட்ஸ் என்ற அமைப்பு இவரை லண்டனுக்கு அழைத்து "கதை மாமணி" என்ற பட்டத்தினை வழங்கி கௌரவித்தது. இத்தகைய பல விருதுகளையும் புகழையும் மட்டக்களப்பு மண்ணுக்கு மாத்திரமன்றி இலங்கைக்கே பெருமையினை பெற்றுக் கொடுத்த மாஸ்டர் சிவலிங்கம். தனது 84வது வயதிலும் வாசிப்புப் பழக்கத்தை கைவிடவில்லை என்பது சிறப்பம்சமாகும். இத்தகைய சிறப்பினைப் பெற்றவர்களை எதிர்கால சந்ததியினருக்கு வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் நம் அனைவருக்கும் உள்ளது.





# ஊடக ஜாம்பவான் துஷ்யந்தனுக்கு தேசகீர்த்தி விருது



தெற்காசிய வலயமைப்பு சமாதான நீதவான்களின் பேரவையினால் தெரிவு செய்யப்பட்ட சமாதான நீதவான்களுக்கு தேசகீர்த்தி விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்றில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கையின் மூத்த அரசியல்வாதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி கலந்து கொண்டார். இதன்போது ஊடகவியலாளர் செல்லத்தம்பி துஜியந்தன் தேசகீர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

1977ம் ஆண்டு சித்திரை மாதம் 11 ஆம் திகதி பிறந்த செல்லத்தம்பி துஜியந்தன் ஜே.பி. பண்டிருப்பை பிறப்பிடமாகக் கொண்டவர். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக கலை இலக்கியம், சமூகம், சமயம் மற்றும் ஊடகத்துறையிலும் தனது பங்களிப்பை நல்கி வரும் இவர் பத்திரிகை வாயிலாக 250 இற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். அத்துடன் கவிதை, சிறுகதை ஆகியவற்றையும் எழுதிவருகின்றார். பின் தங்கிய பிரதேசங்களுக்கு சென்று மக்கள்படும் துயரங்களை ஞாயிறு தினக்குரல் ஊடாக வெளிக்கொணர்ந்தமையினால் சிறந்த ஊடகவியலாளருக்கான விருதினை இரு முறை வென்றுள்ளார். சிறந்த சமூக அபிவிருத்திக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருதினை 2012ஆம், 2013ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ளார். இவ் விருதினை கிழக்கு மாகாணத்தில் பெற்ற ஒரே ஒரு தமிழ் ஊடகவியலாளர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. "விருந்து" எனும் சிற்றிதழ் ஒன்றை ஆரம்பித்து அதன் ஆசிரியராக இருந்து கலை இலக்கியப் பணிகளை முன்னெடுத்து வருவதுடன் நாடகம், குறும்படம், பட்டிமன்றம், மிமிக்கிரி என பல துறைகளில் தன்னை ஈடுபடுத்தி பலரது பாராட்டைப் பெற்றவர். இவரது குறும்படங்கள் கூடுதலாக சமூக விழிப்புணர்வு சார்ந்தவையாக அமைந்திருப்பது சிறப்பாகும். அந்த வகையில் விமோசனம், விரட்டியடி, வட்டி, யார்பிச்சைக்காரன், என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் விரட்டியடி குறுந்திரைப்படம் 2013ல் கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை பிரிவு நடத்திய குறுந்திரைப்படப் போட்டியில் 1ஆம் இடம் பெற்று விருதினையும் 50ஆயிரம் ரூபா பணப்பரிசினையும் பெற்றுக் கொண்டது. குறும்படத்தில் நடிப்பது, இயக்குவது, தயாரிப்பது என பல தரப்பட்ட ஆளுமை உடையவராக காணப்படும் இவர் மாணவர்கள் மத்தியில் கவிதை, சிறுகதை மற்றும் ஒளிப்படக்கலை தொடர்பான பயிற்சி பட்டறைகளை நடாத்துதல், இலக்கிய விமர்சனங்கள், நூல் வெளியீடுகளை நடத்துதல் என பல்வேறு கலை இலக்கியப்பணிகள் மற்றும் அகரம் எனும் அமைப்பை தோற்றுவித்து அதனூடாக வறிய மக்களின் வாழ்வாதாரம், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்கும் கரம் கொடுத்து உதவுதல் போன்ற சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்து கலாசார அமைச்சு ஊடாக 2005ல் இந்தியா சென்று அங்கு ஆன்மீக பயிற்சிகளை பெற்றுக் கொண்டு "இந்துப்பிரசாரகர்" என்ற பட்டத்தினை பெற்று வாழும் கலை பயிற்சிகளை வழங்குதல், இந்து ஆலயங்களில் ஆன்மீக பிரச்சாரங்களை மேற்கொள்ளல், சமயகட்டுரைகளை எழுதுதல் என சமயம் சார்ந்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றார். சமயம், சமூகம், கலை, இலக்கியம், ஊடகம் என பல துறைகளில் இயங்கிவரும் இவரை பாராட்டி 2016ல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் "இளங்கலைஞர் விருது வழங்கி கௌரவித்தது. அத்துடன் தெற்காசிய சமாதான நீதவான்களின் பேரவையினால் "தேசகீர்த்தி" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்க தாகும்.

■ ■ ■

# 16 வது மாவட்ட சாரணர் ஒன்று கூடல்

பதினாறாவது மாவட்ட சாரணர் ஒன்றுகூடல் நிகழ்வு திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் மூன்று நாட்களாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் 24 சாரணர் குழுக்கள் பங்குகொண்டதுடன். பல்வேறு போட்டிகளும் இடம்பெற்றன. இப்போட்டிகளின் முடிவுகள் அடிப்படையில் மூதூர் கிளிவெட்டி மகாவித்தியாலயம் ஆண்கள் பிரிவிலும் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரி பெண்கள் பிரிவிலும் வெற்றி பெற்றன. வெற்றிபெற்ற கிளிவெட்டி மகா வித்தியாலய சாரணர் அணியினருக்கு திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளர் வெற்றிக்கிண்ணத்தை வழங்கி வைப்பதனை படங்களில் காணலாம்.





# சாலி ஹாஜியார் பவுன்டேஷன்

## அமைப்பினால் நடாத்தப்பட்ட

# சிறுவர் தின நிகழ்வு





ஏறாவூர் சாலி ஹாஜியார் பவுன்டேஷன் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச சிறுவர்தின நிகழ்வு அமைப்பின் தலைவர் எம்.எஸ்.நளீம் தலைமையில் மீரா பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செய்யித் அலி ஸாஹிர் மௌலானா பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஏறாவூர் மீரா பாலர் பாடசாலை மற்றும் ஏறாவூர் அல் ஹிரா பாலர்பாடசாலை மாணவ மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 03 நபர்கள் சாதனை





இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற சஹசக் நிமவும் தேசிய ரீதியிலான புத்தாக்க கண்காட்சி செப்டொம்பர் மாதம் 28,29,30 ஆகிய மூன்று தினங்கள் இலங்கை கண்காட்சி மற்றும் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் இந்திய கண்டுபிடிப்பாளர்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி ஏ.எஸ்.ராவ், உலக கண்டுபிடிப்பு, ஆக்கவுரிமை அமைப்பின் பொதுச் செயலாளர் செல்வி மன்லீ ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். இதில் மாகாண ரீதியாக நடாத்தப்பட்ட போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கண்டுபிடிப்பாளர்கள் தமது கண்டு பிடிப்புகளை காட்சிப்படுத்திருந்தார்கள். அதில் மட்டக்களப்பில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 கண்டுபிடிப்பாளர்கள் தெரிவு செய்யப் பட்டிருந்தமை விசேட அம்சமாகும். இதில் தங்கவேல் சக்திக்குமார் அவர்களின் மிக்சர் தயாரிக்கும் இயந்திரம் வணிகவியல் பிரிவிலும் மற்றும் சோடா மூடி அடிக்கும் இயந்திரம், செங்கல் தயாரிக்கும் இயந்திரம், பொலித்தீனில் பிரிண்ட் செய்யும் இயந்திரம் என்பன திறந்த பிரிவிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. திருமதி சுதர்ஷினி சக்திக்குமார் அவர்களின் பைட்ஸ் தயாரிக்கும் இயந்திரம் வணிகவியல் பிரிவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கையில் வருடமொன்றுக்கு 65,000 விவசாயிகள் பாம்புக்கடிக்கு இலக்காகின்றனர். இதில் கிட்டத்தட்ட 90 சதவீதமானோர் கால்களிலேயே பாம்புக்கடிக்கு இலக்காகின்றனர். வருடமொன்றுக்கு 800 பேர் இறக்கின்றனர். இதைத் தடுக்கும் பாதுகாப்பு சப்பாத்து ஒன்றை மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலையைச் சேர்ந்த தரம் 6இல் கற்கும் மாணவி சக்திக்குமார் போஜஸ்வினி அவர்கள் காட்சிப்படுத்தியிருந்ததுடன் பிளாஸ்டிக் மீள்சுழற்சி,



டெங்கு கட்டுப்பாடு போன்ற வற்றுக்கான சூழல்நேய மீன்வளர்ப்புப் பூச்சாடி, மற்றும் நவீன ஸ்மார்ட் அளவுநாடா என்பவற்றை காட்சிப்படுத்தியிருந்தார்.

# முதலமைச்சர் பதவியை வழங்குவது என்பது முஸ்லிம் மக்களுக்கான அரசியல் தீர்வாக அமையாது




காத்தான்குடி நிருபர்

ஒரு சமூகத்துடைய தனித்துவ அரசியல் அடையாளங்களையும், அதன் அடிப்படையிலான அபிலாசைகளையும் மறுதலித்து விட்டு இன்னுமொரு சமூகம் தான் விரும்பும் அரசியல் தீர்வை திணிக்க முயற்சிக்கக்கூடாது. அந்த அணுகுமுறை தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க ஒரு போதும் உதவப்போவதில்லை. மத்திய அரசில் பலமான அமைச்சுப் பதவிகளை வழங்குவதானது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக முடியாது என்பது போலவே வடகிழக்கை இணைத்து விட்டு முதலமைச்சர் பதவியை வழங்குவது என்பதும் முஸ்லிம்களுக்கான தீர்வாக முடியாது என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (NFGG) யின் தவிசாளர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் தெரிவித்தார்.

கடந்த 02.10.2017 அன்று காத்தான்குடியில் இடம் பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில். இந்நாட்டின் இனப் பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்பதிலும் மாகாணங்களுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும் என்பதிலும் எமக்கு மாற்றுக் கருத்தில்லை. அரசியல் தீர்வாக அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றிருந்தால் அது என்ன நியாயங்களின் அடிப்படையில் செய்யப்பட வேண்டுமென்பதில் நாங்கள் தெளிவாக இருக்க வேண்டும். இங்குதான் பிரச்சினை இருக்கிறது. வடக்கையும் கிழக்கையும் இணைத்துத் தான் தமிழ் முஸ்லிம் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் நடக்கப் போகின்றது என்ற அச்சம் தரக்கூடிய ஆருடமான செய்தி ஒன்று இப்போது வெளிப்படத் தொடங்கியிருக்கிறது. முதலில் இடைக்கால யாப்பு அறிக்கையில் சில விடயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வடக்கும் கிழக்கும் தனியாக இருக்க வேண்டும் என்பதும் வடக்கும் கிழக்கும் இணையலாம் என்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. யாப்புருவாக்க குழுவிலே அங்கம் வகித்த கட்சிகளின் ஏகோபித்த முடிவுகள் இடைக்கால அறிக்கையின் பிரதான முன்பகுதியிலும், முரண்பட்ட கருத்துக்கள் பின்பகுதியிலும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

வடக்கும் கிழக்கும் இணையலாம் என்ற கருத்தும், வடக்கும் கிழக்கும் இணையக் கூடாது என்ற கருத்தும் இருவேறு தரப்பினர்களினது தனிப்பட்ட கருத்துக்களாக இருக்குமாயின், அது எப்படி பிரதான அறிக்கையிலே எல்லோரும் ஏற்றுக் கொண்ட கருத்தாக உள்ளடக்கப்பட்டது? இதைத் தொடர்ந்து இப்போது தமிழ் தரப்பு அரசியல் தலைமைகள் முஸ்லிம்களிடம் கோரிக்கை விடுக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். முஸ்லிம்கள் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்கின்றார்கள். அப்படி வடக்கு கிழக்கு இணைப்பிற்கு ஒத்துழைத்தால் அதற்கு பரிகாரமாக முஸ்லிம் முதலமைச்சர் பதவியை தருவதற்கு தாம் தயாராய் இருப்பதாக சம்பந்தன் அவர்கள் சொல்லியிருக்கிறார். "ஒரு நல்ல படித்த கண்ணியமான மனிதரை வடகிழக்கு முதலமைச்சராக நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இருக்கிறோம்"என்று சம்பந்தன் ஐயா சொல்லியிருக்கிறார்.இங்கு தான் நாங்கள் சுயாதீனமாகவும் தைரியமாகவும் நமது மக்களுடைய அரசியல் அபிலாஷ‘களை ஏனைய தமிழ், சிங்கள தலைமைகளுக்கு முன்னால் பேச வேண்டிய தேவையிருக்கிறது. ஆனால் இது விடயத்தில் எல்லோரும் அடக்கி வாசிப்பவர்களாகவே இருக்கின்றார்கள். இவர்கள் மக்களுடைய அபிலாஷைகளை வெளியே சொல்வதற்கு பயப்பிடுகின்றார்கள். நல்லாட்சிக்கான தேசிய முன்னணி இந்த விடயத்தை மிகத் தெட்டத் தெளிவாக எல்லா இடங்களிலும் சொல்லி வந்திருக்கிறது. வடக்கிலே நாங்கள் தேர்தல் ஒப்பந்தம் ஒன்றை செய்த போது வட மாகாண மக்களது அரசியல் உரிமைகளை மிகத் தெளிவாக வலியுறுத்தினோம்.

வட மாகாண சபையிலே வடகிழக்கு இணைப்பு தொடர்பான ஒரு சட்ட முன்மொழிவு வந்த போது அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெளிவாகவும் திட்டவட்டமாகவும் நாம் சொல்லி யிருந்தோம். இதை வேறு எந்தக் கட்சிகளும் செய்யவில்லை. அதற்கு அப்பால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளோடு பேசுகின்ற போது நாம் மிகத் தெளிவாக இந்த விடயங்களைச் சொல்லியிருக்கின்றோம். நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சொல்கின்ற விடயம் இதுதான். அரசியல் தீர்வு என்பது மக்களுக்கான தீர்வே அல்லாமல் அரசியல் வாதிகளுக்கான தீர்வாகவோ கட்சிகளுக்கான தீர்வாகவோ இருக்க முடியாது. வடக்கிலுள்ள மக்களுக்கும் அரசியல் தீர்வு வேண்டும். கிழக்கிலுள்ள மக்களுக்கும் அரசியல் தீர்வு வேண்டும். வடக்கையும் கிழக்கையும் இணைக்காமல் இந்தத் தீர்வை வழங்க முடியாது என்று தமிழ்த் தலைமைகள் சொன்னால் வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சனைகளில் எதனை தீர்ப்பதற்கு வடக்கு கிழக்கு இணைப்பு தேவைப்படுகின்றது? என்ற நியாயத்தை அவர்கள் எமக்கு தெளிவாக சொல்ல வேண்டும். இந்த விடயத்தை பொது மேடையில் உங்களிடம் கேட்பதற்கு முன்னால் தமிழ் மக்களின் தலைமைகளிடம், சம்பந்தன் ஐயா அவர்களிடம், சட்டத்தரணி சுமந்திரன் அவர்களிடம் நாம் நேரடியாக கேட்டிருக்கின்றோம்.

வடக்கு கிழக்கு இணைக்கப்படுகின்ற போது கிழக்கு முஸ்லிம்களுடைய, கிழக்கிலே வாழ்கின்ற ஏனைய மக்களுடைய அரசியல் அபிலாஷைகள் பாதிக்கப் படுகின்றன் நசுக்கப்படுகின்றன என்ற விடயங்களை நாம் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். ஒன்றை நாம் தெளிவாக முன்வைக்க வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்த வரை அவர்களின் அரசியல் அடையாளம் தமிழ் மொழியாகும். முஸ்லிம்கள் அவர்களின் அரசியல் அடையாளமாக தமிழ் மொழியை எடுத்துக் கொள்ளவில்லை. எம்முடைய மத, கலாசார தனித்துவமே எங்கள் அரசியல் அடையாளங்களாகும். இங்குதான் தமிழ் தலைமைகள் முஸ்லிம்களின் விடயத்தில் தவறு விடுகிறார்கள். முஸ்லிம்களுடைய அரசியல் தனித்துவத்தை அரசியல் அடையாளத்தை இவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். ஒரு சமூகத்தினுடைய அரசியல் அடையாளத்தை மறுத்து விட்டு இன்னுமொரு சமூகம் தமது அரசியல் இலக்குகளை அடைந்து கொள்ள முயற்சிக்கக் கூடாது. சம்பந்தன் ஐயா அவர்கள் கூறிய அந்தக் கருத்தைப் பார்த்த பொழுது எனக்கு கவலையாக இருந்தது. முஸ்லிம்களுடைய தனித்துவ அரசியல் அடையாளத்தை விட்டு விட்டு தமிழ் பேசும் மக்களாக மட்டும் எம்மோடு சேர்ந்து கொள்ளுங்கள். வடக்கு கிழக்கை இணைய விடுங்கள் இதற்குப் பரிகாரமாக நாங்கள் ஒரு முதலமைச்சர் பதவியை தருகின்றோம்" என்று சொன்னால் இது எந்த வகையில் நியாயமாகும். அப்படியென்றால் இப்போது யுத்தம் முடிந்து விட்டது நாட்டில் பிரச்சினைகள் எதுவும் கிடையாது சமத்துவமான உரிமை தருகிறோம் சமமான அபிவிருத்தியைத் தருகின்றோம் மத்திய அரசில் பதவிகளைத் தருகின்றோம் உங்களில் ஒருவரை உப ஜனாதிபதியாக்குகின்றோம் நீங்களும் சமஷ்டி கோரிக்கையை விட்டு விடுங்கள்" என்று பெரும் பாண்மை அரசாங்கம் சொன்னால் தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொள்வார்களா? இல்லை ஏனென்றால் தமிழ் மக்களது அரசியல் பிரச்சினை பதவிகளில் தங்கியிருக்கவில்லை.

எனவே தான் இத்தனை காலமாக அவர்கள் எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு அரசியல் செய்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அமைச்சர்களாக இல்லை. மந்திரிகளாக இல்லை. வெளிநாட்டுத் தூதுவர்களாக அவர்களின் ஆட்களை அனுப்புவதில்லை. ஆனால் மக்களது பிரச்சினைகளை தீர்ப்பதில் மட்டும் மிக கவனமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மத்திய அரசாங்கத்தின் பலம் வாய்ந்த அமைச்சராக இருப்பதென்பது அவர்களுடைய பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக முடியாது. அதுபோல முஸ்லிம் முதலமைச்சரைத் தருவது முஸ்லிம்களுடைய அரசியல் பிரச்சினைக்கு தீர்வு அல்ல என்பதனை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது அரசியல் அடையாளங்களை நாம் துணிச்சலாக சொல்ல வேண்டும். இந்த நாட்டில் இன ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய இலங்கை ஒரு புதிய தேசம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அது ஒவ்வொரு மக்களதும் அரசியல் உரிமைகளையும் தனித்துவ அடையாளங்களையும் ஏற்றுக் கொண்டதாக இருக்க வேண்டும். ஒரு பலமான சமூகம் இன்னொரு சமூகத்தின் உரிமைகளை அடக்கிவிட்டு, நசுக்கி விட்டு தேசிய இணக்கப்பாட்டையும் ஐக்கியத்தையும் பற்றி பேசமுடியாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

■ ■ ■

# மூதூர் இந்து இளைஞர் மன்றம் என்னும் போர்வையில்

# புதிய புல்லுருவிகள் புகுந்து தில்லு முல்லு




## உண்மைகள் வெளிப்பட வேண்டும். மக்கள் கோரிக்கை.

மூதூர் முற்றவெளிக்கு அண்மித்ததாக அமைந்திருக்கும் சங்கக் காணி விற்பனை என்கின்ற அறிக்கையையும் அவதானிக்கப்பட்டது. அத்துடன் திரு.சற்சிவானந்தம் அவர்கள் அன்னாரது முகநூலிலும் வெளிப்படுத்தியிருந்தும். அதனைப் பார்வையிட்டோர் பல கோணத்தில் கேள்வி எழுப்பியிருந்தது யாவரும் அறிந்ததேயாகும். இந்த வகையில் உண்மை நிலையை மூதூரில் பிறந்து, வாழ்ந்து வரும் காணி வீட்டிற்கு சொந்தக்காரன் ஆகிய நான் தெளிந்த விரிந்த உள்ளார்ந்தமாக விளக்கத்தை எடுத்துரைக்க விளைகின்றேன். திரு.சற்சிவானந்தன் ஸ்தாபக செயலாளர் எனக் கூறும் கூற்று அப்பட்டமான பொய் உண்மைக்குப் புறம்பானது. மூதூரில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருகின்றவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது தெட்டத் தெளிவானது. எதற்காக இப்படிப்பட்ட புனைகதையை முன்வைத்து தன்னை மிகைப்படுத்துவதற்கு முனைவது எம்மனைவரையும் முட்டாளக்கும் விநோத விந்தைமிகு நாடக அரங்கேற்றமாகும். விடயத்திற்கு வருகின்றேன். மூதூர் இந்து வாலிபர் சங்கம் என்ற பெயரில் முதன்முதலில் ஸ்தாபித்த ஸ்தாபகர் மட்டக்களப்பினை (கல்லாறு)ச் சேர்ந்த திரு.சபாரெத்தினம் ஆசிரியர் மதிப்புக்குரிய எங்கள் கௌரவத்திற்குரிய ஐயா அவர்கள் இவருக்கு அவரைப் பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பில்லை எனலாம்.

தி/புனித அந்தோனியார் க.தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்று வந்த இந்து மாணவர்களின் சமய அறிவை விருத்தி செய்யும் நோக்கத்தில் மூதூர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7.30 மணி தொடக்கம் பி.ப 12 மணிவரை நடைபெறும். வகுப்பில் கற்றவன் என்ற வகையில் எமக்கு வெள்ளிக்கிழமைகளில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலிய பாடல் மனனம் பஜனை செய்வித்த பெருந்தகை அன்னார் ஆவார். இவரது முயற்சிக்கு உறுதுணையாக அன்றைய காலகட்டத்தில் மூதூர் மூத்த கல்விமான்கள், அதிபர்களான எம்மை வழிநடத்திய பெருந்தகையான திருவாளர்கள் திரு.கந்தசாமி முதலி, நொத்தாரிஸ்சுவர்கள், செ.கதிர்காமத்தம்பி, வெ.நடராசா, ஐ.அரசரெத்தினம், கா.ஜீவரெத்தினம், திரு. வர்ணகுலநாதன், குணநாயகம், இவர்களுடன் இன்னும் பலர் உள்ளனர். இவர்கள் சங்கத்தினை காலா காலம் சிறப்பாக நாயன்மார் குருபூஜைகள், பேச்சுப்போட்டிகள், விவேகானந்தா சபை சமய பாட பரீட்சைக்கு கற்பித்தவர்கள். சமய வகுப்புக்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தியதுடன் செயலாற்றிய திரு.சபாரெத்தினம் ஐயா மறைந்தும், இவருக்கு பின்னர் சங்கத்தின் தலைவர் – செயலாளர் – பொருளாளர் பதவிகளில் முறையே காலத்துக் காலம் வழிமுறையாக பின்வருவோர் பதவி வழியில் வந்தார்கள். அவர்கள் ஒழுங்கின் பிரகாரம் திரு.கந்தசாமி முதலி, திரு.செ.கதிர்காமத்தம்பி, திரு.க.நடராசா, திரு.ஐ.அரசரெத்தினம், இதன் பின்னர் திரு. செ.கதிர்காமத்தம்பி, திரு.ஓ.தர்மராஜா, திரு.கா.ஜீவரெத்தினம் இதன் பின்னர் திரு.செ.கதிர்காமத்தம்பி, திரு.ஒ.குலேந்திரன், திரு.கா.ஜீவரெத்தினம், இதனைத் தொடர்ந்து திரு.கா.ஜீவரெத்தினம், திரு.வே.சண்முகநாதன், திரு.பூபா புண்ணியமூர்த்தி, இதனைத் தொடர்ந்து திரு.வி.வசந்தகுமார், திரு.பூபாகோபால், திரு.வே. சண்முகநாதன் இத்துடன் தொடர்ந்து பணியாற்றியவர்கள் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களின் காரணமாக மூதூரிலிருந்து அநேகர் இடப்பெயர்வுக்கும், பாதிப்புக்கும் உள்ளாகினர்.

அப்போதிருந்த திரு.வி.வசந்தகுமாரின் நல்ல பணிகள் அக்காலகட்டத்தில் நன்றாகசெயற்பட்டவர். இவரைக் கூட சற்சிவானந்தம் மறந்து போன காரணம் புரியாதுள்ளது. இதனிடையே இந்து வாலிபர் சங்கம் என இயங்கிய திரு.மறவன்பு லோ. சச்சிதானந்தம் அவர்கள் தலைமையில் அகில இலங்கை இந்து இளைஞர் ஓர் பேரவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் சகல இந்து வாலிபர் சங்கங்களும், இந்து இளைஞர் மன்றம் எனப் பெயர் மாற்றம் பெற்றதும், இது திரு.வெ.கதிர்காமத்தம்பி ஐயா தலைவராகவும், திரு.ஒ.குலேந்திரன் செயலாளராகவும், திரு.கா.ஜீவ ரெத்தினம் பொருளாளராகவும் கடமையாற்றிய 1975ம் ஆண்டு காலத்தில் ஆகும். இவ்வாறு இருக்க திரு.சற்சிவானந்தம் அவர்கள் ஸ்தாபகர் செயலாளர் என்று கூறுவது வேடிக்கையானது. திரு.வி.வசந்தகுமார் பொறுப்பேற்ற வேளையில் இந்து இளைஞர் மன்றத்தில் உள் நுழைந்து அதில் ஈடுபட்டிருந்த கடற்கரைச்சேனை கிராமத்திலிருந்து மூதூரில் திருமணம் முடிந்த வகையால் புகுந்த வீட்டு பெருமையை நிலைநாட்டிட இவ்வாறு ஸ்தாபகரானாரோ புரியாத புதிராகவுள்ளது. தன்னை சிவபாதசுந்தம் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் மன்றம், பேரவையின் செயற்பாட்டிலும் தன்னை இணைத்துக் கொண்டவர் “அகம்” என்ற அமைப்பில் தாய், தந்தையர்கள் இழந்த பிள்ளைகளின் மூதூரில் சிறுவர் பராமரிப்பு நிலையம் அமைத்து சிறப்பாக பணியாற்றிய பின்னர் மூதூரில் அசாதாரண நிலையில் இந்நிலையப் பிள்ளைகளை கைவிட்டு செல்ல மல்லிகைத்தீவு திரு.வீரசிங்கம் போன்றவர்கள் இந்து இளைஞர் மன்றத்தின் துணையுடன் மணற்சேனையில் அப்பிள்ளைகளுக்கு காப்பகம் அமைத்து நடாத்திவருகின்றனர். இக்காப்பகத்தினையும் தற்போது கபளீகரம் செய்வதற்கு முனைப்புடன் செயலாற்றுவதாகவும் அறிகின்றேன். இவரது இவ்வாறான செயற்பாடுகளுக்கு மாவட்ட உதவி அரச அதிபர் அவர்களை பயன்படுத்துவதாகவும் அறியக்கிடக்கின்றது.

**மூதூர் எஸ்.எஸ்.ராஜ்**

இந்நிலையில் திரு.சற்சிவானாந்தம் கூறும் காணி விடயத்திற்கு வருவோம். மூதூர் நகரில் மேற்கூறப்பட்ட காணி எஸ்.ரி.ஆர்.சினிமா நிறுவனம், திரு.தியாகராசா அவர்கள் மூதூர் சைவ அன்பர்கள் மரணமடைந்த கிராமசேவையாளர் சமூகசேவையாளர் அமரர்.குணநாயகம் அவர்கள் முயற்சியின் துணையுடன் 80 பேர்ச் காணி மூதூரின் அண்மித்த பால நகர், ஆலிம்சேனை ஆகிய பகுதிகளிலும் நகர்புற இந்து பிள்ளைகளுக்காக ஓர் ஆரம்பப்பாடசாலை ஒன்றினை அமைத்து கல்வி நடவடிக்கையினை மேற்கொள்ள பெற்றுக் கொள்ளப்பட்டது. இதனை நன்கறிந்தவர் திரு.சற்சிவனாந்தம் ஆனால் இவர் ஸ்தாபகச் செயலாளர் எனக்குறிப்பிடப்படும். இந்து இளைஞர் மன்றம் எப்போது எந்த ஆண்டில் அதன் செயற்பாட்டிலுள்ள நிர்வாகிகள் விபரம் என்ன என்பதனை அறியத்தருவாரா? இவரது பொறுப்பிலிருந்து இம்மன்றம் மூதூரை விட்டு இடம்பெயர்ந்து மூதூர் பக்கமே வராதிருக்கும் காலமோ அதிகம். ஆனால் மூதூர் நிருபர் என்ற பதவியில் இயங்குகின்றார். எத்தனை காலம்தான் ஏமாற்றலாம் இந்த நாட்டிலே இயங்காத ஓர் அமைப்பின் ஸ்தாபகர் செயலாளராக தன்னை அறிமுகப்படுத்தி திரு.தண்டாயுதபாணியின் நிதி ஒதுக்கீட்டை பெற்றுக் கொண்டதும், அதனைச் செயற்படுத்தாத நிலை எவ்வாறு? நிதி ஒதுக்கீடு முறையற்றது. அத்துடன் இன்னொரு இந்து இளைஞர் மன்றம் மூதூரில் 2017ல் திரு.க.வல்லிபுரம் தலைமையில் திரு.பொ.அதிரதன் செயலாளர்.

அவர்களை உள்ளடக்கிய ஓர் நிர்வாகக் கட்டமைப்பினை உருவாக்கி ஒரே மாதத்தில் நான்கு கூட்டங்களை காணி விற்பனை தொடர்பாக நடாத்தி கூடியவர்களை ஏமாற்றி காணி விற்றுள்ளார்கள். வாங்கியவர் காணி அளவீடு செய்வதற்கு சென்ற போது காணியின் பரப்பளவு குறைநத்து மூதூர் வாழ் முஸ்லீம்கள் சிலர் காணியை பிடித்துள்ளதும், வீதி அமைப்பதற்கு பெரும் பகுதி கபளீகரம் பிரதேச சபையில் எடுக்கப்பட்டிருப்பதும் காணி அளக்கும் போது முஸ்லீம்கள் நில அளவையாளரை அளவீடு செய்யமுடியாது தடுத்தும் உள்ளனர். இந்நிலையில் திருக்கோணமலையிலிருந்து சேனையூர் பிரதேசம் (மூதூர் கிழக்கு) செல்கின்ற போது அவதானித்தவர் கட்டைப் பறிச்சான் சென்று அங்கிருந்த மூன்று பேருடன் திரும்பி காணி அளக்கும் இடத்தில் சென்று பிரச்சனையுடன் காணியின் உரிமை பற்றி தெரிவித்து அளவீடு செய்ய சென்றவரை தடுத்து அனுப்பியதாகவும் பின்னர் மூதூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும், அதனைத் தொடர்ந்து அவரது முறைப்பாட்டு செயற்பாடுகள் நடந்தேறியுள்ளன.

இதனிடையே 2013ம் ஆண்டு மார்கழி மாதம் திகதி திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை செயலாளரின் அழைப்பின் பேரில் மூதூர் நவரத்தினம் மண்டபத்தில் மூதூர் இந்து இளைஞர் மன்றம் புனரமைப்புக்கூட்டம் நடைபெற்றுள்ளது. இதன் நிர்வாகிகள்

| | | |
|---|---|---|
| தலைவர் | – | சிவஸ்ரீ சு.வேலுப்பிள்ளை சர்மா |
| செயலாளர் | – | திரு.பொ.அதிரதன் |
| பொருளாளர் | – | திரு.சி.செந்தில் |
| காப்பாளர்கள் | – | திரு.ஒ.குலேந்திரன் |
| | | திரு.வே.சண்முகநாதன் |
| | | திரு.க.வல்லிபுரம் |

நிர்வாக சபையில் ஒன்பது பேர்கள் உள்ளடக்கியதாகவும் இதன் கணக்காய்வாளாராக திரு.த.ஆனந்தராசாவும் தேர்வு செய்யப்பட்டனர். இதுவே இன்றைய மூதூர் இந்து இளைஞர் மன்றம் அதனை வைத்துக் கொண்டு காணி விற்க முடியாது என்பதனை அறிந்த திரு.க.வல்லிபுரம் தன்னை தலைவராகக் கொண்டு ஓர் அமைப்பினை 2017 இல் ஆரம்பித்து நான்கு செயலவைக் கூட்டத்தினை எட்டாம் மாதம் காணியில் கூட்டி காணி விற்பனை செய்வதனை அடிப்படையாக் கொண்டு செயற்படுத்தி பெரும் மோசடி புரிந்துள்ளார்கள். இச் செயற்பாடுகள் நடந்தேறியுள்ள தனை சம்பந்தப்பட்டவர்கள் பகிரங்கமாக தெளிவு படுத்த முன்வர வேண்டும். 80 பேர்ச் காணியை விற்பனை நடைபெறம் வரை ஏன் வேலி அடைப்பதற்கு தனித்துவமாக நிதிபெற்றள்ள திரு.சற்சிவானந்தம் கண் காணிக்கவில்லை உரிய நடவடிக்கைகள் மூலம் கண்மூடித்தனமாக இருந்துவிட்டு, தனக்கு விற்பனையில் ஒருபகுதி தரவேண்டும் என கேட்டதாகவும், திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை செயலாளரிடம் எழுத்தின் மூலம் கடிதம் வழங்கியிருப்பதாகவும் அறிய முடிகின்றது. இதே போல் திரு.க.வல்லிபுரம் அவர்களும் தனக்கும் விற்பதில் ஒருபகுதி எனக்கு வேண்டும் எனக் கேட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் இத்தகவலை வெளிப்படுத்தியுள்ளார். சகல விடயங்களையும் ஆராய்ந்து அறியாத உண்மைக்குப் புறம்பான செயற்பாடுடையவர்களது வேண்டுகோள்கள், கோரிக்கைகள், நிதி ஒதுக்கீடுகள் ஆகியவற்றை மூதூர் பிரதேச செயலக இந்து சமய விவகாரங்களுக்கான முகாமைத்துவ உதவியாளர்கள், மாவட்ட உதவி அரசாங்க அதிபர், கல்வி அமைச்சர் திரு.சி.தண்டாயுதபாணி ஆகியோர் நடைமுறைக்கு சாத்தியமற்றவர்களின் செயற்பாடுகளை கண்காணித்து உண்மைகளை வெளிக்கொண்டு வர முன்வாருங்கள்.

# ரைட் சகோதரர்கள்





1903ம் ஆண்டு 12ம் மாதம் 17ம் திகதி உலக வரலாற்றில் மறக்க முடியாத நாள். மனிதன் உண்மையிலேயே வானத்தில் பறந்த நாளாகும். அதைச் சாதித்தவர்கள் வில்பர்ட் ரைட் ஆர்வில்ரைட் என்ற சகோதரர்களாவர். விமானத்தைக் கண்டு பிடித்த ரைட் சகோதரர்களின் தந்தை ஒரு மதகுரு ஆவார். அவருக்கு 4 மகன்களும் 1 மகளும் இருந்தனர்.அவர்களுள் 03வது மகன் தான் வில்பர் ரைட் 04வது மகன்தான் ஆர்வில் ரைட். வில்பர் ரைட் 1867ம் ஆண்டு 4ம் மாதம் 16ந் திகதி பிறந்தார். ஆர்வில் ரைட் 1871ம் ஆண்டு 8ம் மாதம் 19ம் திகதி பிறந்தார். இவர்கள் தாம் கண்டுபிடித்த விமானத்திற்கு கிட்டி கொக் என்று பெயரிட்டனர். ஆர்வில் ரைட் பயணம் செய்த விமானம் 850 அடி தூரம் வரை பறந்தது. இந்த அதிசயத்தை 5 பேர் மட்டுமே கண்டனர். இந்த சாதனையை 1905ம் ஆண்டு வரை யாரும் நம்பவில்லை. 1905ம் ஆண்டு சகோதரர்கள் மீண்டும் நிகழ்த்திக் காட்டினார்கள். பிறகு இவர்களுடைய சாதனையை உலகமே ஏற்றுக் கொண்டது.

ஆக்கம்
**ஜெ. கிருஸ்டிக்கா**
தரம்:- 04v, மட்/அருணோதய வித்தியாலயம்

# தமிழ் ஓசை நுண்ணறிவு

## வினாவிடைப் போட்டி



**போட்டி இல. : 02**

### வினாக்கள்

1. 265 உடன் 70 ஐக் கூட்டியபின் பத்தின் இடப்பெறுமானத்தின் பெறுமானம் யாது?
2. முதலாவது சதுர எண்ணுடன் எட்டைக் கூட்டினால் வருவது?
3. A தோட்டத்தில் 330 தேங்காய்களும் B தோட்டத்தில் A தோட்டத்தை விட 99 தேங்காய்கள் குறைவாகப் பறிக்கப்பட்டன. எனின் இருதோட்டங்களிலும் பறிக்கப்பட்ட தேங்காய்கள் எத்தனை?
4. கிழக்கு திசை நோக்கிச் சென்ற ஆதித்யா வலது பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்று மீண்டும் வலது பக்கம் திரும்பிச்சென்றாள் அவள் நிற்கும் திசைக்கு எதிர்த்திசை யாது?
5. தை மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனில் அம்மாதத்தில் உள்ள வெள்ளிக்கிழமையின் எண்ணிக்கை யாது?
6. பி.ப 4.30க்கு 20 நிமிடம் முந்திய நேரத்தை நியம நேரத்தில் குறிப்பிடுக?
7. 16 சதுர சென்ரிமீற்றர் பரப்பைக் கொண்ட சதுரத்தின் இருபக்கத்தின் நீளம் யாது?
8. ஒருவரிசையில் 12 செடிகள் வீதம் 8 வரிசைகளும் இன்னுமொரு வரிசையில் 8 செடிகள் வீதம் 3 வரிசைகளும் இன்னுமொரு வரிசையில் 6 செடிகள் வீதம் 6 வரிசைகளும் காணப்பட்டால் மொத்தம் எத்தனை செடிகள்?
9. இரண்டின் மூன்று மடங்குடன் நான்கைக் கழித்தால் கிடைக்கும் விடை?
10. ரமேஸின் வயது 18 ஆகும் அவனுடைய தந்தையின் வயது அவனுடைய வயதைப்போல் 06 மடங்கிலும் ஆறுகூடியதாகும் ஆறு வருடங்களுக்குப்பின் தந்தையின் வயது என்ன?
11. ஒரு கயிற்றுத் துண்டானது இரு சமதுண்டுகளாக வெட்டப்பட்டு அதில் ஒரு துண்டு மேலும் இருதுண்டுகளாக வெட்டப்பட்டது எனின் அதில் சிறிய துண்டின் நீளம் 4 மீற்றர் ஆகும் கயிற்றின் மொத்த நீளம் யாது?
12. ஒரு கண்காட்சிக்கு நான்கு பெரியவர்களும் இரண்டு சிறியவர்களும் மூன்று சின்னக்குழந்தைகளும் வருகை தந்தனர். அவர்கள் அனைவரின் கண்களின் எண்ணிக்கைகளைத் தருக?
13. 20kg நிறையுடைய சீனியை வாங்கிய வியாபாரி 250g நிறையுடைய எத்தனை பைகளில் பொதிகள் செய்யலாம்?
14. ஒரு செடியில் முதலாம் நாள் இருமலர்கள் மலரும் இரண்டாம் நாள் முதலாம் நாள் மலர்ந்ததைப்போன்று இரு மடங்குக்கு ஒருமலர் குறைவாக மலரும் இதே போன்று தொடர்ந்து மலரும் செடியில் ஐந்தாம் நாள் மலரும் மலர்களின் எண்ணிக்கை யாது?
15. 128 + ☐ = 400

**நிபந்தனைகள்.**

- தரம் – 03 04 05 வகுப்பு மாணவர்கள் மாத்திரம் பங்குபற்ற வேண்டும்.
- வினாக்களுக்குரிய சரியான விடையினை கீழ்குறித்த படிவத்தில் எழுதி விண்ணப்பத்தை பூர்த்தி செய்து வெட்டி தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் படிவத்தினை பிரதி செய்து அனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- குறித்த பத்து வினாக்களுக்குரிய சரியான விடையினை எழுதியவர்கள் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படுவர் தெரிவுசெய்யப்படும் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூபா 500, 300, 250 பணப்பரிசில்கள் வழங்கப்படும் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர்கள் அடுத்து வரும் பத்திரிகையில் வெளியிடப்படுவதுடன் அதிஸ்டசாலிகளாக 5பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களது பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

குறிப்பு : நுண்ணறிவு 01 இற்கான விடைகளும் வெற்றிபெற்றவர்கள் விபரமும் 03 இல் வெளியாகும்.

**விடைகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி**
**20-11-2017**

**அனுப்ப வேண்டிய முகவரி**
**ஆசிரியர்**
**தமிழ் ஓசை**
**இல. 184, பஸார் வீதி, மட்டக்களப்பு**

**விடைகளை எழுதி அனுப்பவேண்டிய படிவம்**

01. ____________ 02. ____________
03. ____________ 04. ____________
05. ____________ 06. ____________
07. ____________ 08. ____________
09. ____________ 10. ____________
11. ____________ 12. ____________
13. ____________ 14. ____________
15. ____________

முழுப்பெயர் : ____________
முகவரி : ____________
தொலைபேசி இல. : ____________ தரம் : ____________
பாடசாலை : ____________

## மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள்.


அ. தனன்ஜனன்
162


ஏ. அட்சரன்
188


க. ரக்ஷிகன்
156


க. கவிசாய்ந்
165


க. டக்க்ஷன்
158


கே.கஜானனன்
166


ர. லகீசன்
161


ரே. கேமப்பிரியன்
157


ச. கிஷோத்மிகன்
176


க. சாருஜன்
161


சி.அம்ஷகரன்
175


சு. அக்சிகன்
162


சு. ஜஸ்மிலன்
154


து. லக்க்ஷாந்
170


ஸ்ரீ. சஜீவன்
156


ஜீ. கனிருசன்
156


பா. திரிசாத்
157


பா.றனுசன்
156


பு. ரேஸ்மிதன்
164


ம. ஷருக்க்ஷன்
167


மோ. ருக்க்ஷன்
159


ய. சனுஜன்
161


ரி. திபிசாந்
165

## கல்முனைக் கோட்டத்தின் சம்மாந்துறை வலயத்தின் புதுநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 11 மாணவர்கள் சித்தி



## முறாவோடை சக்தி வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள்.


கஜேந்திரன் சஞ்ஜீவன்
**162** புள்ளிகள்



பிரதீபன் நிதுர்சன்
**182** புள்ளிகள்


வைரமுத்து லிலோஜன்
**160** புள்ளிகள்


பதினாறு வருடத்திற்கு பின்னர் நாவற்குடா தர்மரெட்ணம் வித்தியாலயத்தில் சாதனை படைத்த மாணவியுடன் அதிபர் கற்பித்த ஆசிரியரும்


ர. விதுஷாலினி
**154** புள்ளிகள்

## கல்லடி விநாயகர் வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள்.


அ. கேயூரன்
**156** புள்ளிகள்


உ. சுகேஷினி
**160** புள்ளிகள்


# HOTEL EAST LAGOON

HOTEL East Lagoon



Munai Lane, Uppodai Lake Road,
Sinna Uppodai, Batticaloa, 30000, Sri Lanka.

+94 65 2 229222

PRIDE OF BATTICALOA


இப் பத்திரிக்கையானது தமிழ் ஓசை நிறுவனத்தினரால் மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தில் அக்டோபர் மாதம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.